71-73 Abstracts Tamil 29-09-2003 14:17 Pagina 71



# Abstracts in Tamil

## What is a Psychosocial intervention

**உள சமூகத்தலையீடு என்றால் என்ன?**

*உள சமூகத்துறையிலே, இலங்கையிலும் சரி, உலகளாவிய ரீதியிலும் சரி, "உள சமூகத்தலையீடு" என்பதன் அர்த்தத்திற்குத் தெளிவானதொரு இணக்கப்பாடு இல்லாதிருக்கின்றது. இலங்கையில் நடைபெறுகின்ற பலவிதமான உளசமூகத் தலையீடுகளின் கட்டமைப்புகளையும், நடைமுறைகளையும் உதாரணமாகக் கொண்டு, இப்படிப் பரந்து கிடக்கின்ற தற்போதைய தலையீடுகளை எவ்வாறு "உள சமூகம்" என்கின்ற குடையின்கீழ்க் கொண்டுவரலாம் என்பதனை இந்தக் கட்டுரையாளர் விளக்க முற்படுகிறார். இறுதியாக, இந்தக் கட்டுரை, 'உளசமூக வேலைக் குழுவினரால்' முன்வைக்கப்படுகின்ற, புதிதாக அறிமுகமாகின்ற ஒரு கருத்துநிலைக் கட்டமைப்பினை விரிவாக விளக்குவதோடு, இலங்கையில் உள்ளது போன்ற நிலைமைகளில் நடைபெறுகின்ற உளசமூகத் தலையீடுகள் பற்றி விளங்கிக்கொள்வதற்கு எடுக்கப்படவேண்டிய முயற்சிகள் பற்றியும் கூறுகின்றது.*

**முக்கியமான சொற்பதங்கள்:** உள சமூகத்தலையீடு, கருத்துநிலைக் கட்டமைப்பு, இலங்கை.

## Training psychosocial counseling in Nepal

**நேபாளத்தில் உளசமூக உளவளத்துணைப்பயிற்சி – ஒரு விசேட பயிற்சித்திட்டத்தினுடைய உள்ளடக்க ஆய்வு**

*இந்தக் கட்டுரையானது, நேபாளத்தில் உள்ள 'சித்திரவதைக்கு ஆளானவர்களுக்கான நிலையத்தில்' நடத்தப்பட்ட உளசமூக உளவளத்துணையாளர்களின் பயிற்சியைப் பற்றி, அது நடந்த விதமாக விபரிக்கின்றது. இங்கு பயிற்சியினுடைய நிகழ்ச்சித் திட்டமும், பயிற்சியின் உள்ளடக்கமும் விபரிக்கப்படுகின்றது. விடயங்களைத் தெளிவாக்கும் நோக்கத்தோடு அடிக்கடி சந்திக்கும் பிரச்சினைகளைக் கையாள்வதற்கான திறன்களைப் பயிற்றுவிக்கும் பகுதிக்கும், விசேடமான அணுகுமுறை தேவைப்படுகின்ற பிரச்சினைகளைக் கையாள்வதற்கான திறன்களைப் பயிற்றுவிக்கும் பகுதிக்கும் இடையே ஒரு வகைப்பிரிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

**முக்கிய சொற்பதங்கள்:** பிரச்சினை தீர்க்கும் சிகிச்சை முறை, உளவளத்துணை, உளவளத்துணைப்பயிற்சி, எச்.ஐ.வி, எயிட்ஸ், ஒன்றிணைந்த பராமரிப்பு

## An extra language in counseling and training

**உளவளத்துணையிலும், பயிற்சியிலும் ஒரு மேலதிக மொழி.**

*ஆயுதப் போராட்டம் நடைபெறுகின்ற பிரதேசங்களில் உள்ள அகதிகளுடன் உளவளத்துணையாளராகவும், உளவளத்துணையாளர்களுடன் பயிற்சியாளராகவும் பணி செய்த பொழுது, நாங்கள் மொழி, தொடர்பாடல், சம்பந்தப்பட்ட பலவிதமான பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டி வந்தது. மொழி பெயர்ப்பாளர்கள் இந்தப் பிரச்சினைகளை ஓரளவுக்குச் சமாளிக்க உதவினர். ஆயினும், இதைவிட, பிளாஸ்ரிக் பொம்மைகளைப்*

71-73 Abstacts Tamil 29-09-2003 14:17 Pagina 72



*பாவித்து நாங்கள் கற்றுக்கொண்ட முறைமை, பல்வேறுபட்ட வித்தியாசமான கலாசாரப் பின்னணியையுடைய மக்களுடன் வேலை செய்வதற்குகந்த ஒரு மேலதிக ஊடகமாக அமைந்திருந்தது. இந்தக் கட்டுரையில் நாங்கள் இந்த பொம்மைகளைப் பாவிப்பது சம்பந்தமாக விபரிக்கின்றோம்.*

**முக்கியமான சொற்பதங்கள்:** ஆயுதப் போராட்டம், அகக்குழந்தை, அகவய உரையாடல், பொம்மைகள்(உளவளத்துணைக்கும், பயிற்சிக்குமான கருவிகளாக)

## Steps towards empowerment for community healing

**சமுதாயக்குணமாக்கலுக்கான மன உறுதிப்பாட்டை நோக்கிய படிமுறைகள்**

*ஜனநாயக மக்கள் கொங்கோவின் வடக்குப்பகுதியில், அண்மையில் நடந்த ஒரு மனிதப்படுகொலைச் சம்பவத்திலிருந்து தப்பிப் பிழைத்த சமூக சுகாதாரப் பராமரிப்புத்திட்டத்தின் பணியாளர்கள் இந்தக் கட்டுரையின் ஆசிரியரிடமிருந்து உதவி கோரினார்கள். மூன்று நாட்களாக நடந்த சந்திப்பின்பொழுது, பங்குகொண்டவர்களின் மனவடு அனுபவங்கள் கலந்துரையாடப்பட்டன. "இறந்தவரைப் புதைத்தல்" போன்ற சடங்குகளை நிகழ்த்துதல், நெருக்கீடு, மனவடு சம்பந்தமான உளக்கல்வி பெறுதல் போன்ற பல படிமுறைகள் குழுவினரது வள ஆளணியினரைப் பாவித்து உருவாக்கப்பட்டன. தங்களுடைய சமூகத்திலே மிக அதிகமானோர் இவ்வாறான பாதிப்புக்குள்ளாகியிருப்பதனைக் கருத்திற் கொண்டு, தாங்கள் கற்றுக்கொண்டவற்றை அவர்களிடம் கையளிக்க வேண்டிய அவசியம் பற்றிக் கலந்துகொண்டோர் உணர்ந்து கொண்டனர். அதற்கும் மேலாக, தங்களுடைய சமூக நலத்திட்டத்திலே இந்த விடயங்களை இணைத்துக்கொள்ளவும், அதில் உள்ள உளநலம் சம்பந்தமான கலைத்திட்டத்தை மாற்றியமைப்பதற்கும் அவர்கள் முன்வந்தார்கள்.*

**முக்கியமான சொற்பதங்கள்:** பாரிய மனவடு, "இறந்தவரைப் புதைத்தல்", சமுதாய குணமாக்கல், சமுதாய நலம், உளநலம், மனவடுவுக்குள்ளான சமுதாயம்

## Psycho-education through radio

**வானொலியூடு உளக்கல்வி**

*காஷ்மீர் பள்ளத்ததாக்கிலே வதியும் மக்களிடையே உளசமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி வளர்க்குமுகமாக, எல்லை கடந்த மருத்துவக் குழுவினரால்(MSF) ஒரு வாராந்த வானொலி நிகழ்ச்சி 2003ம் ஆண்டு பங்குனி மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. MSF இன் உள்ளூர் மற்றும் சர்வதேச பணியாளர்களால் தயாரிக்கப்படுகின்ற இந்நிகழ்ச்சி மக்களின் சமூக, கலாசார, சமய நம்பிக்கைகளைக் கருத்திற்கொண்டு கவனமாகத் தடம் பதிக்கிறது. இந்த நிகழ்ச்சியினுடைய ஒவ்வொரு பகுதியும், பொதுமக்களுடன் கதைத்தல், மருத்தவர்களுடனான நேர்காணல், குவியக்குழுமக் கலந்துரையாடல் போன்ற முறைகளையுள்ளடக்கிய, விரிவான கள ஆய்வுகளினடியாகவே தயாரிக்கப்படுகின்றது.*

**முக்கியமான சொற்பதங்கள்:** உளக்கல்வி

71-73 Abstacts Tamil 29-09-2003 14:17 Pagina 73



## Volunteers as helpers in war related distress

**போருடன் தொடர்பான நெருக்கீடுகளில் உதவியளிப்பவர்களாக மாறும் தொண்டர்கள்**

*போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்கொள்ளும், குணமாகும் படிமுறைகளில் சமூக வலைப்பின்னல் கொண்டுள்ள முக்கியத்துவத்தை இப்பொழுது உளநல நிபுணத்துவம் உணர்ந்துகொண்டுள்ளது. போர் தொடர்பான சூழ்நிலைகளில், இயற்கையாக இருக்கின்ற சமூக வலைப்பின்னல்கள் சிதைந்து, அழிந்து, தொலைந்து போகின்றன. இத்தகைய சூழலிலே, சமூகத்தொண்டர்கள், சமூக வலைப்பின்னலை விரிவுபடுத்தவும், செழுமைப்படுத்தவும் உதவும் சாத்தியம் இருக்கின்றது. அவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட அல்லது அகதியான சிறுவர்களின் நலன்களைக் கவனித்தல், மனங்களைப் பலப்படுத்துதல் போன்ற பல வழிகளில் விசேடமாகப் பங்களிக்கலாம். இந்தக்கட்டுரையானது போருடன் தொடர்பான வெவ்வேறு நிலைகளிலும், பகுதிகளிலும் இடம் பெற்ற சமூகத்தொண்டர்களின் பணிகளை விபரிக்கின்றது.*

**முக்கியமான சொற்பதங்கள்:** போர், சிறுவர், அகதிகள், (சமூகத்)தொண்டர்கள், உள சமூக உதவியாளர்கள்

## The evolution of mental health services in war: a case register in Bosnia - Herzegovina

**போர் நிலைமைகளில் இடம் பெறுகின்ற உளநல சேவைகளின் மதிப்பீடு:**

**போஸ்னியா - கேர்சிக்கோவினாவில் ஒரு விபரப் பதிவேடு**

*போரினால் சிதைந்துபோன இடங்களில் நடைபெறும் உளநலத்திட்டங்கள் உதவி அதிகமாகத் தேவைப்படுகின்ற மக்களுக்கு அவை உடனடியாக வழங்கப்படுவதை இலக்காகக் கொண்டிருக்கும். சாதாரணமாக, இவ்வாறான சூழ்நிலைமைகளில் உதவியளிக்கப்படும் மக்களின் அடிப்படைத்தரவுகளையோ, செயற்படுத்தப்படும் தலையீடுகளைப்பற்றியோ ஒழுங்குபடுத்தப்பட்ட பதிவுகளை மேற்கொள்ளும் உந்துதல்கள் இருக்காது. இருப்பினும், அவ்வாறு செய்வதற்குத் தேவையான முக்கியத்துவம் வளர்ந்துகொண்டு செல்கிறது. நன்கு திட்டமிடப்பட்ட முறைகளில் தகவல்கள் சேகரிக்கப்படும்பொழுது, அவை துறைசார் நிபுணர்களுக்கு தங்களிடம் உதவி நாடி வருபவர்களின் வயது, பால், எண்ணிக்கை போன்ற விபரங்கள் பற்றியும், வழங்கப்படும் தலையீடுகளின் பயன்பாடு பற்றியும் ஒரு உள்ளுணர்வு ஏற்பட உதவும். இதனை அடித்தளமாகக் கொண்டு அவர்கள் தங்களின் வேலையின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துக்காட்ட முடியும். இந்தக் கட்டுரை போஸ்னியா, கேர்சிக்கோவினா பகுதிகளில் அவ்வாறான ஒரு கண்காணிப்பு நடைமுறையின் உருவாக்கம், நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் நன்மை, தீமைகளைப் பற்றி விபரிக்கின்றது. இவ்வாறான மதிப்பீட்டுப் பணிகளில் முறையியற் பிரச்சினைகள் உருவாகினாலும், அடிப்படையில் தீமையை விட நன்மையான விடயங்களே கூடுதலாக இருக்கின்றன என்பது, குறிப்பாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் நெருக்கீடுகளிலுங்கூட, இங்கு விவாதிக்கப்படுகின்றது.*

**முக்கியமான சொற்பதங்கள்:** உளநலப்பணிகள், மதிப்பீடு, போர்